வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 16.04.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

நாட்டின் மக்கள் தொகையில், சரிபாதியாக இருக்கும் மகளிரை முடிவெடுக்கும் அமைப்பின் ஒரு அங்கமாக மாற்ற வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின், 3 நாள் சிறப்பு அமர்வு இன்று தொடங்கியது.

ஜிப்மரின் மருத்துவ கல்வித்துறை, 50 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்து பொன் விழா கொண்டாட உள்ளதாக, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெற இன்னும் ஒரு வாரகாலமே எஞ்சியுள்ள நிலையில், அரசியல் கட்சியினர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

***மோடி – நாரிசக்தி (17)***

நாட்டின் மக்கள் தொகையில், சரிபாதியாக இருக்கும் மகளிரை முடிவெடுக்கும் அமைப்பின் ஒரு அங்கமாக மாற்ற வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இன்று மக்களவையில், நாரி சக்தி வந்தன் அதினியம் தொடர்பான அரசியலமைப்பு திருத்தங்கள் குறித்த 3 மசோதாக்கள் குறித்த விவாதத்தின்போது பேசிய அவர், நாட்டின் வளர்ச்சியில் மகளிர் சக்தி முக்கிய பங்காற்றி வருவதாகவும், கொள்கை வகுப்பதில் அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிப்பது காலத்தின் தேவை என்றும் கூறினார்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க சட்டத்திற்கு அரசியல் சாயம் பூசவேண்டாம் என்று, எதிர்கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்த பிரதமர்,

இந்த சட்டத்தை இப்போது எதிர்ப்பவர்கள் எதிர்காலத்தில் அதன் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் திசையையும், எதிர்காலத்தையும் வடிவமைப்பதில் இந்த சட்டம் முக்கிய பங்காற்றும் என்று தெரிவித்த பிரதமர், வளர்ந்த இந்தியா என்பது உள் கட்டமைப்பு, ரயில்வே அல்லது பொருளாதார வளர்ச்சியுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை என்றும் மாறாக மகளிரின் சமமான பங்களிப்பு தேவைப்படுகிறது என்றும் கூறினார். கொள்கை வகுப்பதில், அனைவருடனும், அனைவரின் வளர்ச்சி என்ற உணர்வை மேம்படுத்த அரசு விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

***நாடாளுமன்றம் -1 (6)***

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின், 3 நாள் சிறப்பு அமர்வு இன்று தொடங்கியது. மக்களவையில் மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், அரசியலமைப்பு மசோதா 2026 மற்றும் தொகுதி மறுவரை மசோதா – 2026-ஐ தாக்கல் செய்தார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, யூனியன் பிரதேச சட்டங்கள் திருத்த மசோதா- 2026-ஐ அறிமுகம் செய்தார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

***நாடாளுமன்றம் -2 (17)***

மசோதாக்களை அறிமுகம் செய்த சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், பெண்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்க அரசு செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார். ஒரு சமூகத்தின் முன்னேற்றம் என்பது பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அளவைக் கொண்டே மதிப்பிடப் படுவதாக, டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் கூற்றை மேற்கோள் காட்டினார்.

நாடு முழுவதும் பெண்களுக்கு ஒதுக்கப்படும் இடங்கள் சீராகவும், சட்டப்படியும் ஒரே மாதிரியாக இருப்பதை உறுதி செய்யும் வகையில், மக்களவையின் மொத்த இடங்களின் எண்ணிக்கை தற்போது இருப்பதை விட, 50 சதவிகிதம் அதிகரிக்க வேண்டியது அவசியம் என்றும், இதன் மூலம் மக்களவையில் 815 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்றும், இதில் 272 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படும் என்றும் திரு. அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்தார்.

மசோதாக்கள் மீதான எதிர்கட்சிகளின் விவாதத்தை தொடக்கி வைத்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. கவுரவ் கோகோய், தனது கட்சி மகளிர் இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக உள்ளது என்றும், ஆனால் அது, தொகுதி மறு வரையறையுடன் இணைக்கப்படாமல் தனியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

***நாடாளுமன்றம் - 3 (16)***

மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி. சோனியா காந்தி, இதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில், மகளிர் இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி கோரிக்கைகளை முன் வைத்து இருந்ததையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த மசோதாக்கள் நாட்டின் கூட்டாட்சி அமைப்பை சீர்குலைக்கும் என்று தெரிவித்த காங்கிரஸ் எம்.பி. திரு. கே.சி வேணுகோபால், இம்மசோதாக்களை அறிமுகப்படுத்துவதை எதிர்த்தார். இதற்கு பதிலளித்த உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, மசோதாக்களை அறிமுகப்படுத்துவது தொடர்பான ஆட்சேபனைகளை மட்டுமே திரு. வேணுகோபால் எழுப்ப முடியுமே தவிர, மசோதாக்களின் உள்ளடக்கம் குறித்து பேச முடியாது என்று, கடுமையாக மறுத்துரைத்தார்.

சமாஜ்வாதி கட்சி எம்.பி. திரு. அகிலேஷ் யாதவ் பேசும்போது, முதலில், மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும், மசோதாக்களை இவ்வளவு அவசரமாக கொண்டு வரவேண்டியதன் அவசியம் என்ன என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி தொடங்கி விட்டது என்றும், சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த அரசு ஏற்கனவே முடிவெடுத்துள்ளது என்றும் பதிலளித்தார்.

***நாடாளுமன்றம் - 4 (10)***

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி. ககோலி கோஷ் தஸ்திதார் பேசும்போது, பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்பது எதிர்கால தொகுதி மறு வரையறையைச் சார்ந்து உருவாக்கப்படுவதாகக் கூறி, மசோதாக்களை அறிமுகப்படுத்த எதிர்ப்புத் தெரிவித்தார்.

முன்னதாக, மக்களவை கூடிய போது, அண்மையில் உடல்நலக் குறைவு காரணாக, மும்பையில் காலமான பழம்பெரும் பின்னணிப் பாடகி ஆஷா போஸ்லேவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அப்போது பேசிய

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, இந்திய சினிமா மற்றும் இசைக்கு அவர் ஈடு இணையற்ற பங்களிப்பை செய்துள்ளார் என்று தெரிவித்தார். மேலும், முன்னாள் உறுப்பினர்களின் மறைவிற்கும் மக்களவை இரங்கல் தெரிவித்தது.

***மோடி – 1 (15)***

ஆஸ்திரியாவின் அதிபர் டாக்டர் கிறிஸ்டியன் ஸ்டாக்கர்-உடன் மிகவும் பயனுள்ள கலந்துரையாடல்களை மேற்கொண்டதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று ஆஸ்திரியா அதிபருடன் தாம் மேற்கொண்ட கலந்துரையாடல் குறித்து சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ள பிரதமர், டாக்டர் ஸ்டாக்கர் ஐரோப்பாவிற்கு வெளியே மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவென்றும், இது இந்தியா – ஆஸ்திரியா உறவுகள் மீதான அவரது தொலைநோக்குப் பார்வையையும், அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், ஆஸ்திரிய அதிபர் டாக்டர் கிறிஸ்டியன் ஸ்டாக்கருடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது, பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பின்னர், ஆஸ்திரிய அதிபருடன் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்த பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள் கட்டமைப்பு, புத்தாக்கம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் இரு நாடுகளும் நம்பகமான கூட்டாளிகளாக இருந்து வருகிறது என்றார்.

***மோடி – 2 (6)***

ஆஸ்திரிய அதிபர் டாக்டர் கிறிஸ்டியன் ஸ்டாக்கர் பேசும்போது, தனது இந்தியப் பயணம் ஆஸ்திரிய – இந்திய உறவுகளின் ஒரு மைல் கல் என்று குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியே, மிக முக்கியமாக வர்த்தக நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்று அவர் தெரிவித்தார். முன்னதாக, இன்று காலை, டாக்டர் ஸ்டாக்கரும், அவரது மனைவியும் ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

*ஜிப்மர் (17)*

ஜிப்மரின் மருத்துவ கல்வித்துறையானது, மருத்துவக் கல்வி மற்றும் ஆசிரியர் திறன் மேம்பாட்டில் 50 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்து பொன் விழா கொண்டாட உள்ளதாக, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி தெரிவித்துள்ளார். இது குறித்து ஜிப்மர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 1975ஆம் ஆண்டு மத்திய சுகாதார அமைச்சகம் மற்றும் உலக சுகாதார அமைப்பின் ஆதரவுடன் ஜிப்மர் மருத்துவ கல்வித்துறை தொடங்கப்பட்டதாகவும், இது இந்தியாவின் நவீன கற்பித்தல் முறைகள் மற்றும் மருத்துவ கல்வி ஆய்வுகளில் ஆற்றிய பங்களிப்பிற்காக மருத்துவ கல்வியின் முன்னோடி மையம் என்று அழைக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

இதுவரை, 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மருத்துவ ஆசிரியர்கள் இங்கு பயிற்சி பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொலைநோக்குத் திட்டம் 2030கீழ் மருத்துவம் மற்றும் சுகாதாரக் கல்விக்கான தனி சிறப்பு மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பங்கள், மேம்பட்ட கல்வித் திட்டங்கள் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மருத்துவ கல்வியை வலுப்படுத்தவும் ஜிப்மர் திட்டமிட்டுள்ளது.

***பிரச்சாரம் -1 (3)***

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெற இன்னும் ஒரு வாரகாலமே எஞ்சியுள்ள நிலையில், அரசியல் கட்சியினர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

***பிரச்சாரம் - 2 (15)***

திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், நாமக்கல் உழவர் சந்தை பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் இடையே இன்று வாக்குச் சேகரித்தார்.

அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிச்சாமி, கோயம்புத்தூரில், கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

ராமநாதபுரத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு, பிஜேபியின் முன்னாள் தலைவர் திரு. அண்ணாமலை ஆதரவு திரட்டினார்.

தர்மபுரி பாலக்கோட்டில் பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ், நாகை கீழ்வேளூர் பகுதியில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே தொகுதி வரையறை மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக சார்பில் அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கருப்புக் கொடியேற்றி போராட்டத்தை தொடக்கி வைத்தார். தமிழகத்தின்பல்வேறு பகுதிகளிலும், திமுகவினர் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

***மன்சுக் மாண்டவியா (18)***

இந்தியாவில் 2019ஆம் ஆண்டு முதல் ஊக்கமருந்து சோதனைகள் இரு மடங்கு அதிகமாகி உள்ளதாக, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற உலகளாவிய ஊக்கமருந்து குறித்த உளவு மற்றும் புலனாய்வு வலையமைப்பின் மாநாடு ஒன்றை தொடக்கி வைத்துப் பேசிய அவர், விளையாட்டுத் துறையின் நேர்மைக்கு பங்களிக்கும் வகையில், அதன் விதிமுறைகளுக்கு ஏற்ப இந்தியா முன்கூட்டியே சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தியா ஊக்கமருந்து எதிர்ப்பு சோதனையை 2019ஆம் ஆண்டு சுமார் 4 ஆயிரம் என்ற அளவிலிருந்து, கடந்த 2025ஆம் ஆண்டில் ஏறத்தாழ 8 ஆயிரம் சோதனை என்ற அளவை எட்டியுள்ளதாக தெரிவித்தார். ஊக்கமருந்து பயன்பாட்டை திறம்பட ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்த உலகளாவிய நடவடிக்கை தேவை என்பதை டாக்டர் மன்சுக் மாண்டவியா வலியுறுத்தினார்.

கேலோ இந்தியா மற்றும் ஃபிட் இந்தியா இயக்கம் போன்ற முன்னெடுப்புகள் விளையாட்டுத் துறையில் இந்தியாவை வல்லரசாக மாற்ற சரியான திசையில் செயல்படுவதாகவும், விளையாட்டை நாட்டின் தேசிய அடையாளத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற்றும், இந்தியாவின் முன்னுரிமைகள் குறித்தும் கூறினார்.

***மாநிலங்களவை (11)***

மாநிலங்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அவைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பிஜேபியின் தேசிய தலைவர் நிதின் நபின் மற்றும் அக்கட்சியைச் சேர்ந்த தெராஷ் கொவாலா, ஜோகன் மோகன், ஷிவேஷ் குமார், வினோத் ஸ்ரீதர் தாவ்டே, சுஜித் குமார், லக்ஷமி வர்மா, சஞ்சய் பாட்டியா ஆகியோரும் இன்று உறுப்பினர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அபிஷேக் மானுசிங்கி, ஃபுலோ தேவி, கரம் வீர் சிங், அனுராக் ஷர்மா, வெம் நரேந்திர ரெட்டி, ஐக்கிய ஜனதாதளம் கட்சியைச்சேர்ந்த ராம்நாத் தாக்கூர், ராஷ்டிரிய லோக் மோட்சாவின் உபேந்திரா புஷ்வாஹா ஆகியோரும் உறுப்பினர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

***வானிலை (10)***

கங்கை நதியையொட்டிய மேற்கு வங்கம், ஒடிஷா, கடலோர காராஷ்டிரா மற்றும் ஆந்திப்பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளம் மற்றும் மாஹே பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு வெப்பமான மற்றும் ஈரப்பதமான வானிலை நிலவும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், மத்திய பிரதேசத்தின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகள், விதர்பா, வட உள் கர்நாடகா, சத்தீஸ்கர், தெலங்கானா, ஒடிஷா மற்றும் மத்திய மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு கடும் வெப்ப அலை நிலவக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***கிரிக்கெட் (3)***

ஐபிஎல் 20-20கிரிக்கெட் போட்டியில் இன்று, மும்பை இண்டியன்ஸ் அணியும், பஞ்சாப் கிங்ஸ் அணியும் மோதுகின்றன. இன்றிரவு 7.30 மணிக்கு மும்பை வான்கடே மைதானத்தில் போட்டித் தொடங்குகிறது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

நாட்டின் மக்கள் தொகையில், சரிபாதியாக இருக்கும் மகளிரை முடிவெடுக்கும் அமைப்பின் ஒரு அங்கமாக மாற்ற வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின், 3 நாள் சிறப்பு அமர்வு இன்று தொடங்கியது.

ஜிப்மரின் மருத்துவ கல்வித்துறை, 50 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்து பொன் விழா கொண்டாட உள்ளதாக, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெற இன்னும் ஒரு வாரகாலமே எஞ்சியுள்ள நிலையில், அரசியல் கட்சியினர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.